தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24357580.*


**வழக்கு எண். 24473 / விசாரணை / 2009**

**<u>விசாரணை நடைபெற்ற நாள் 27.01.2010.</u>**

| | |
|---|---|
| முன்னிலை : | திரு. தி.சீனிவாசன். எம்.எஸ்சி.,<br>மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர் : | திரு. கே. ஆறுமுகம்,<br>2/93 -A, செங்கப்பள்ளி,<br>பாலப்பட்டி அஞ்சல்,<br>பரமத்தி–வேலூர் வட்டம்,<br>நாமக்கல் மாவட்டம். |
| பொது அதிகார அமைப்பு : | பொதுத் தகவல் அலுவலர்/<br>தொழிலாளர் நல அலுவலர்,<br>சேலம் கூட்டுறவு சர்க்கரை மில்ஸ் லிமிடெட்,<br>மோகனூர் – 637 015,<br>நாமக்கல் மாவட்டம். |

------

மனுதாரர் திரு. கே. ஆறுமுகம் விசாரணைக்கு வரவில்லை. திரு. ட்டி. உலகநாதன், பொதுத் தகவல் அலுவலர் / தொழிலாளர் நல அலுவலர், சேலம் கூட்டுறவு சர்க்கரை மில்ஸ் லிமிடெட்., மோகனூர், நாமக்கல் மாவட்டம் இவ்வாணையத்தில் இன்று (27.01.2010) நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தார்.

மனுதாரர் 19.10.07 அன்று ஒரு சில தகவல்கள் கேட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி மனு செய்துள்ளார். மனுதாரருக்கு 16.11.07 அன்று தகவல்கள் அனுப்பப்பட்டுள்ளன. மனுதாரர் மீண்டும் 30.09.09 அன்று இவ்வாணையத்திற்கு மேல்முறையீடு செய்த மனு இன்று ( 27.01.2010) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணைக்கு மனுதாரர் வராததால் பொதுத் தகவல் அலுவலரிடம் விசாரிக்கப்பட்டது. மனுதாரர் மேல்முறையீட்டு மனுவில் 19.10.07 தேதிய மனுவிற்கு 16.11.07

அன்று கொடுத்த தகவல்கள் சரியில்லை என்றும், 30.08.06 அன்றைய மனுவிற்கு 22.09.06 தேதியில் அளித்த பதில்கள் உண்மையல்ல என்றும், 29.11.07 அன்று அளித்துள்ள தகவல்கள் சரியில்லை என்றும் ஒரு சில நகல்களை இணைத்து அனுப்பியுள்ளார். மனுதாரர் 2006–07–ம் ஆண்டுகளில் கொடுக்கப்பட்ட மனுவிற்கு தரப்பட்ட தகவல்கள் குறித்து ஒரு சில கருத்துக்களை தெரிவித்து 30.09.09 அன்று இவ்வாணையத்திற்கு மேல்முறையீடு செய்துள்ளார். இது குறித்து பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் பல மனுக்கள் அளித்து உள்ளதாகவும், அவ்வப்போது தகவல்கள் தரப்பட்டதாகவும் தெரிவித்தார். மனுதாரர் மனுவில் குறிப்பிட்டது போல 20.09.06 அன்று அளிக்கப்பட்ட தகவல்களுக்கும், 16.11.07 அன்று அளிக்கப்பட்ட தகவல்களுக்கும் மேல்முறையீடு செய்துள்ளார் என தெரிய வருகிறது. மனுதாரர் வராத நிலையில் மனுதாரர் தகவல் உரிமைச் சட்ட விதி 19(3)–ன் கீழ் உரிய காலத்தில் மேல்முறையீடு செய்யாததால் இம்மேல்முறையீட்டு மனு நிராகரித்து இவ்வாணையம் ஆணையிடுகிறது.

ஒப்புதல் பெறப்பட்ட நாள் 01.02.2010 தமிழ்நாடு தகவல் ஆணையம்
ஆணையத்தின் ஆணைப்படி

( சு. மோகன தாஸ் )
உதவிப் பதிவாளர்

<u>வழக்கு எண். 24473/09</u>

பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர்/ தொழிலாளர் நல அலுவலர்,
சேலம் கூட்டுறவு சர்க்கரை மில்ஸ் லிமிடெட்,
மோகனூர் – 637 015,
நாமக்கல் மாவட்டம்.

திரு. கே. ஆறுமுகம்,
2/93 -A, செங்கப்பள்ளி,
பாலப்பட்டி அஞ்சல்,
பரமத்தி–வேலூர் வட்டம்,
நாமக்கல் மாவட்டம்.